அமைக்கும் வரை—இதை மாற்ற ஒத்துக்கொள்ளுங்கள், என்று அந்த நகர மக்களுக்கு எடுத்துச் சொல்லி, அப்படி அந்த மக்கள் ஐ.டி. ஹாஸ்பிடலுக்குப் போக இரண்டு வான்களை அரசாங்கம் தருவதற்குத் தயாராக இருக்கிறது என்று சொல்லி சமாதானப் படுத்தியிருக்கிறோம். விரைவில் அந்த முயற்சி வெற்றி பெறும் என்றும், இந்த ஐ.டி. ஆஸ்பத்திரியை மாற்றி, இ.எஸ்.ஐ. திட்டம் துவங்கப்படும் என்றும் அரசாங்கம் நினைத்திருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : சார், இந்தத் திட்டம் 500 பேர்களுக்குக் குறைவாக இருந்தால் அமுல்படுத்துவதில்லை. ஒரு 5 பேர்கள் குறைவாக இருந்தாலும் திட்டத்தை இப்பொழுது அமுல்படுத்துவது இல்லை. ஆகவே குறைந்த எண்ணிக்கை உள்ள இடங்களிலும் அமுலாக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : இந்தத் திட்டம் எந்த எந்த இடங்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. 1,500–க்கு மேல் இருக்கும் இடங்களை முதன் முதலாக எடுக்கிறோம். கொஞ்சம் கொஞ்சம் வசதிகள் அதிகமாக ஏற்படும்போது எல்லா இடங்களுக்கும் விரிவுபடுத்துவோம்.

திரு. சு. துரைசாமி : அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, கோவைப் பகுதிக்கு விரைவில் கொண்டுவரப்படும் என்று சொன்னார்கள். உத்தேசமாக எவ்வளவு நாட்களில் விரிவுபடுத்தப்படும் என்பதை அறிவிக்க முடியுமா ? அதோடு, கோவையில் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகள் கட்டுகிறார்கள். தொழிலாளர்கள் குடும்பங்களும் மருத்துவ வசதி பெறும் என்கிற ஏற்பாட்டைச் செய்யமுடியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய மருத்துவத் துறை அமைச்சர் ஆர்வம் காட்டி, உடனடியாக அந்த நகரத்திற்கு விரிவுபடுத்த, இடைக்கால ஏற்பாடாக ஏதாவது கட்டடம் கிடைக்குமா என்றும் முயற்சிக்கிறார்கள். இப்பொழுது கட்டப்படும் கட்டடத்தை நானே பார்த்தேன். ஒரு பகுதி முடிவு பெற வேண்டும். அதிலே லாண்ட் அக்விஷிஷன் தகராறு இருக்கிறது. சம்பந்தப்பட்டவர்களோடு கலந்து பேசி உடனடியாக முடிவு எடுத்தால் விரைவில் திட்டம் அமுலுக்கு வரும்.

திரு. எஸ். அக்னிராஜு : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் மருத்துவ மனை கட்டி, ஆரம்பிக்க நாளாகின்றது. ஆகவே, இடைக்கால ஏற்பாடாக, "மொபைல் வான்" களைத் தொழிலாளர்களுடைய இல்லங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதே மொபைல் வான்கள் அனுப்புவது என்று திட்டத்தில் இருக்கிறது. கிட்டத்தட்ட 73 மொபைல் டிஸ்பென்சரிகள் இருக்கின்றன. குடும்ப திட்டம் விரிவு ஆகும்போது, மருத்துவ விடுதி நல்ல முறையில் அமையும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், தொழிலாளர்களிலே ஆண்களும், பெண்களும் இருக்கிறார்கள். இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகளில் பெரும்பாலும் ஆண் டாக்டர்களை மாத்திரம் தான் நியமிக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் ஆண்டாக்டர்களும், பெண் டாக்டர்களும் கலந்து நியமிக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எங்கெங்கு பெண் மருத்துவர் தேவையோ, அங்கெல்லாம் அப்படி நியமிக்கப்படும்.

மேலூர், நத்தம் சாக்கடை அமைப்புத் திட்டங்கள்.

*304 வினா — **திரு. பெ. மலைச்சாமி** : மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், மேலூர், நத்தம் நகரங்களில் சாக்கடைத் திட்டத்தை அமுல்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த இரண்டு ஊர்களும் பேரூராட்சி மன்றங்களாக இயங்குகின்றன. ஞாயிறு, திங்கள் இரண்டு நாட்களிலும் பொதுச் சந்தை கூடும் நகரங்களாகவும், மக்கள் தொகை அதிகமாகவும் இருக்கிறதால், வருகிற ஆண்டிலாவது இதைப் பரிசீலிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் அங்கத்தினர் சொல்வது உண்மை தான். நிதி நிலையை அனுசரித்துச் செய்யவேண்டியது அது.

மாட்டுக்கொட்டகைகள் கட்ட கடன்.

*305 வின :—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1966–67-ம் ஆண்டில், தஞ்சை மாவட்டத்திற்கென "மாட்டுக் கொட்டகை கட்டுவதற்கான கடன்" வழங்கும் திட்டத்தின் கீழ் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(இ) ஒதுக்கப்பட்ட முழுத் தொகையும் உபயோகப்படுத்தப்பட்டதா ?

(உ) 1967–68-ல் ராஜ்யம் முழுவதற்கும் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :

(அ) ரூ. 4,52,000.

(இ) ஆம்.

(உ) 1967–68-ம் ஆண்டுக்கான கணக்குத் தலைப்பின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தனியாக நிதி ஒதுக்கம் எதுவும் செய்யப்படவில்லை. நில மேம்பாட்டுக்கான கடன்கள், உழவர்களுக்கான கடன்கள் சட்டங்களின் கீழ் அவரவர்களின் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்சொன்ன காரியத்திற்காகச் செலவுசெய்கிருர்கள் என்ருலும், மேற்சொன்ன காரியத்திற்காக 1967–68-ம் ஆண்டுக்கான நில மேம்பாட்டுக்கான கடன்கள் உழவர்களுக்கான கடன்கள் சட்டங்களின் கீழ் அவரவர்களின் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முறையே ரூ. 4,45,000, ரூ. 5,000, ரூ. 2,500 வழங்கியுள்ளதாக அறிவித்துள்ளனர்.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த மாட்டுக் கொட்டகைக் கடன், தஞ்சை மாவட்டத்தில் , பெருவாரியாக வதிசபடைத்தவர்களுக்கே கொடுக்கப்படுகிறது. ஏழை எளிய விவசாயிகளுக்கும் அத்தகைய கடன் வாங்குவதற்குள்ள சட்ட திட்டம் அதிலே இல்லை. ஆகையினுல், இனிமேலாவது கொடுக்கும் இத்தகைய மாட்டுக் கொட்டகை கடன்களை மாடு வைத்திருக்கிற, ஏழை, எளிய விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கான திட்டத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கொடுக்கின்ற கடனுக்கான விதிமுறைகள் இருக்கின்றன. அவற்றை அனுசரித்து, ஊராட்சி ஒன்றிப்பு ஆணையர்கள் விண்ணப்பங்களைப் பரிசீலித்து, மாவட்ட ஆட்சித் தலைவர் தொகைகளைக் கொடுக்கிருர்கள். வேறு ஏதாகிலும் குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டால், அவற்றை நிவர்த்திக்க முயற்சி மேற்கொள்ளப் படும்.